# திருவண்ணாமலை நகராட்சி

## அவசரக் கூட்டம்

20.05.2022 ம் தேதி வெள்ளி கிழமை மாலை 4.00 மணிக்கு திருவண்ணாமலை நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகரமன்ற அவசரக் கூட்டப் பொருள் / தீர்மானம் விபரம்.

| வ. எண். | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | அரசாணை (நிலை) எண். 52 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1 , நாள் 01.04.2022 வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் களைப் பின்பற்றி திருவண்ணாமலை நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான மண்டல வாரியாக அடிப்படை மதிப்பு தொகையை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இந்நகர மன்ற தீர்மானம் எண்.32 நாள் 11.04.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>இந்நகர்மன்ற தீர்மானத்தில் இயற்றப்பட்டுள்ளவாறு பொது மக்கள் அறிந்து கொள்ளவும், பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் இருப்பின் நகராட்சி ஆணையருக்கு 30 நாட்களுக்குள் எழுத்து வடிவில் தெரிவிக்கலாம் என்ற பொது அறிவிப்பு தினமலர், தினமணி தமிழ் நாளிதழிலும் **TRINITY MIRROR** என்ற ஆங்கில நாளிதழிலும் **13.04.2022**ந் தேதியில் விளம்பரம் செய்யப்பட்டது. அதில் திரு. எம். பிரகலாநாதன், நகரசெயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) திருவண்ணாமலை என்பவர் சொத்துவரி விகிதாச் சார உயர்வினை திரும்ப பெற வேண்டுமென தெரிவித்து **20.04.2022**ந் தேதிய விண்ணப்பத்தில் ஆட்சேபனை மனு செய்துள்ளார்.<br><br>சொத்துவரி சீராய்வு **01.04.2008**ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. சொத்துவரி | தீர்மானம் எண். 51 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | உயர்வு இல்லாமல் பதிமூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் நிதி ஆதாரம் உயர்த்தி அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக 01.04.2022ந் தேதி முதல் சொத்துவரி சீராய்வின்படி திருத்தியமைக்கப்பட்ட அடிப்படை மதிப்பீடுகளை உறுதி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு –</u>**<br>1._மன்றம் அனுமதிக்கலாம்<br>2. புதியதாக சேர்க்கப்பட்டுள்ள தெருக்களுக்கு தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மண்டல மதிப்பில் புதியதாக சொத்துவரி விதிப்பு 01.04.2022 முதல் செய்வதற்கும் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1762/2022/அ2** | |

**ஆணையாளர்,**
**திருவண்ணாமலை நகராட்சி.**